இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 335 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 30 – சனிக்கிழமை 15 ஜூலை 2023 – மதுரை 16 + 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 335 : Thiruvalluvar Year - 2054 - Aani 30 - Saturday 15 July 2023 - Madurai 16+12 Pages ₹ 5.00


### சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மூதூர் மதுரைக்கு மற்றுமோர் மணிமகுடமாக, அறிவுத் திருக்கோயிலாக - புதுநத்தம் சாலையில்

# ‘கலைஞர் நூற்றாண்டு நூலகம்’!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - இன்று திறந்து வைத்து விழாப் பேருரையாற்றுகிறார்!

**மதுரை, ஜூலை 15-**

**மூதூர் மதுரையில் – “கலைஞர் நூற்றாண்டு நூலகம்” இன்று திறந்து வைக்கப்படுகிறது.**

**புதுநத்தம் சாலையில் மிகுந்த பொலிவோடு அமைக்கப் பெற்றுள்ள ‘கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை’ இன்று நடைபெறும் விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து விழாப் பேருரையாற்றுகிறார்.**

அதன் விபரம் வருமாறு:-

வாசிப்பிலும் எழுத்திலும் தீராக் காதல் கொண்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடும் விதமாக அவர் பெயரில் மதுரையில் நூலகம் தொடங்கப்படவிருக்கிறது.

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தின் பகுதியாகத் தமிழ்நாட்டின் தலைநகரில் நூலகம் அமைத்தார் கலைஞர். இப்போது, தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தலைநகரில் கலைஞருக்கு நூலகம் அமைத்திருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அறிவுசார் சமூகத்தை வளர்த்தெடுக்க வேண்டுமென்பதே இந்நூலகத்தின் நோக்கம்!

உலகளாவிய நூலகச் சேவையையும், நவீனத் தகவல்களையும் எளிதில் கிடைக்கக் கூடிய வகையில் வழங்கி அறிவுசார் சமூகத்தை வளர்த்தெடுக்க வேண்டும் என்பது இந்நூலகத்தின் முதன்மையான நோக்கம்.

**பண்பாட்டுப் பரிமாற்றம்!**

பிற மாநிலங்களுடனும், உலக நாடுகளுடனும் இணைந்து பண்பாட்டுப் பரிமாற்றம் காண வேண்டும் என்பதற்காக இந்நூலகம் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், அனைத்துத் தரப்பு மக்களும் பயன்படுத்தும் வகையில் நவீனத் தொழில்நுட்ப வசதியுடன் நூலகச் சேவை எளிமைப்படுத்தப்பட்டிருக்கிறது. குழந்தைகள் தொடங்கி முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் என வெவ்வேறு பிரிவினரின் தேவையை உணர்ந்து தொடங்கப்பட்டிருக்கிறது.





கலைஞர் நூற்றாண்டு நூலகம் மதுரை புது நத்தம் சாலையில் அமைந்திருக்கிறது. ‘சென்னை கோட்டூர்புரம்’ என்றாலே ‘அண்ணா நூலகம்’ எனும் அளவுக்கு அதன் முகமாக மாறியிருப்பதைப் போல, இனி ‘புது நத்தம்’ என்றால் ‘கலைஞர் நூலகம்’ என்றாகிவிடும்.

2.13 லட்சம் சதுர அடிப் பரப்பளவில், ரூ.114 கோடி மதிப்பீட்டில், அடித்தளம் தரைத் தளத்தோடு 6 தளங்களுடன் பிரம்மாண்ட மாக நூலகம் கட்டப்பட்டுள்ளது.

**சர்வதேச நூல்கள்!**

சர்வதேச அளவில் பதிப்பிக்கப்படும் அறிவியல் நூல்கள், நவீன வெளியீடுகள், வரலாற்று நூல்கள், மருத்துவ நூல்கள், தொழில்நுட்ப நூல்கள் என வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த 3.3 லட்சம் புத்தகங்கள் இந்நூலகத்துக்காகக் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மதுரையின் மிக முக்கிய அடையாளமாக மாறப்போகும் இந்நூலகத்தை இன்று (ஜூலை 15) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்துவைக்கிறார்.

நூல்களை இரவல் வழங்குவதற்கும் பெற்றுக்கொள்வதற்குமான பிரிவு, சொந்த நூல்கள் வாசிப்பதற்கான பிரிவு, குழந்தைகள் பிரிவு, கலைஞர் பிரிவு, தமிழ் நூல்கள் பிரிவு, நாளிதழ், பருவ இதழ்கள், ஆராய்ச்சி இதழ்கள், ஆங்கில நூல்கள், போட்டித் தேர்வுகள், அரிய நூல்கள், பல்லூடகம், நூல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் அதன் பயன்பாட்டுக்கும் தேவைக்கும் உகந்த விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**வரலாற்றுச் சான்றாதாரக் களஞ்சியம்!**

வரலாற்று ஆய்வாளர்களுக்கான மிகப் பெரும் சான்றாதாரக் களஞ்சியமாக இந்த நூலகத்திலுள்ள அரிய நூல்கள் பிரிவு இருக்கும். எடுத்துக்காட்டாக, 1918 இல் வெளிவந்த ‘ஜஸ்டிஸ்’ ஆங்கில இதழ்களும், திராவிட இயக்கத் தலைவர்கள் வெளியிட்ட 50க்கும் மேற்பட்ட இதழ்களும் இந்தப் பிரிவில் இடம் பெற்றுள்ளன.

1824 இல் வெளிவந்த சதுரகராதி முதல் பதிப்பு, லண்டன் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தை அடுத்து மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்தில் மட்டும்தான் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கலைஞர் நூற்றாண்டு நூலகமானது குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், போட்டித் தேர்வுக்குத் தயாராகுபவர்கள், பெண்கள், மூத்த குடிமக்கள் என அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறை சார்ந்தும் வெளிவந்த தமிழ், ஆங்கில நூல்கள் அந்தந்தத் துறைகளில் சிறந்து விளங்கும் வல்லுநர்களைக் கொண்ட குழுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேலும், வாசிப்பதற்கும் ஆய்வுக்குமான தளமாக மட்டுமல்லாமல் வேறு பல அறிவுச் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் நிகழ்ச்சிகளுக்கான அரங்கம், சிறார்களுக்கான திரை யரங்கம், சிறார் அறிவியல் கூடம், பார்வை மாற்றுத் திறனாளி களுக்கான ஒலிநூல் ஸ்டுடியோ, கலைக் கூடம் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், கலை, பண்பாடு, அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த கற்றலுக்கான மையமாகவும் இது இயங்கும்.

முற்றிலும் குளிரூட்டப்பட்ட இந்நூலகத்தில் மின்னுருவாக்கப் பிரிவுகளும் உண்டு. அரிய நூல்கள், ஆவணங்கள், ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகளை மின்னுருவாக்கம் செய்து, மின்நூலகம் உருவாக்கி உலகமெங்கும் வாழும் தமிழர்களுக்கு எடுத்துச் செல்லப்படும்.

பார்வையற்றோருக்கான புத்தகங்கள் மட்டுமில்லாமல் அனைத்துப் புத்தகங்களையும் அவர்கள் வாசிக்கும்படி DAISY MP3, BRF, Audio formatகளில் வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது.

**தொடர் நிகழ்ச்சிகள்!**

குழந்தைகளுக்கான கதைசொல்லல், அறிவியல் அறிதல், கலைகள், விளையாட்டு, யோகா, கைவினைச் செய்முறைகள் போன்ற தொடர் நிகழ்வுகளையும் விடுமுறை காலச் சிறப்பு நிகழ்ச்சிகளையும் மேற்கொள்ளத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மகளிருக்கான சுயதொழில் பயிற்சி வகுப்புகள், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்


---

### நாடாளுமன்றத்தில்

# பா.ஜ.க. அரசின் பேராபத்தை விளக்க வேண்டும்!

## முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடந்த கழக எம்.பி.க்கள் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, ஜூலை 15 -**

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் பேராபத்தை நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் விளக்க வேண்டும் என்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.**

இது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு :-

**தீர்மானம் :**

கடந்த ஒன்பது ஆண்டுகால பா.ஜ.க. அரசால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள வேதனைகளை, தமிழ்நாட்டை – தமிழ்நாட்டு மக்களைப் புறக்கணித்து ஏமாற்றியதை, வருகின்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் உரக்கக் குரலெழுப்புவோம்!

- “தேர்தல் வாக்குறுதிகளை” நிறைவேற்றுவதற்குப் பதில் விளம்பரத்தில் மோகம்;
- வங்கிக் கணக்கு ஒவ்வொன்றிலும் “15 லட்சம் ரூபாய் போடுவதற்கு பதில்” ஒவ்வொரு குடும்பத்திலும் விதவிதமான வரி வசூல்;
- “மாநிலங்களுக்கு ஜி.எஸ்.டி. வரிப் பங்களிப்பில் உரிய நிதி வழங்காமல் வஞ்சிப்பது;
- “பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை குறைப்புக்குப் பதில்” இந்த மூன்றின் விலையையும் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்த்தியது;
- “ஆண்டிற்கு 2 கோடி வேலை வாய்ப்பு வழங்குவதற்கு பதில்” ஒட்டுமொத்த இளைஞர்களையும் வேலையில்லா திண்டாட்டத்தில் கொண்டு வந்து விட்டது;
- “கூட்டுறவு–கூட்டாட்சி” என்று கூறிவிட்டு – மாநில அரசுகளை முனிசிபாலிட்டிகளாக ஆக்கிவிடத் துடிப்பது;
- ‘உழவர்களின் தோழன்’ என்று கூறிக்கொண்டே அவர்கள் வாழ்க்கையை – வாழ்வாதாரத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் உழவர்களுக்கு எதிரான மூன்று வேளாண் சட்டங்களை இயற்றியது – எதிர்த்துப் போராடிய உழவர்களை அலட்சியம் செய்ததும், பின் அனைத்துத் தரப்பு எதிர்ப்பினைக் கண்டு பயந்து பின் வாங்கியது;
- ஏழைகளுக்கு கடனளிக்க எந்தத் திட்டமும் இல்லை நம் இந்திய நிதி அமைச்சரிடம்; ஆனால், பா.ஜ.க.வால் கார்பரேட் முதலாளிகளின் கண்ணசைவில் இயங்கும் கம்பெனிகளுக்கு கடன் தள்ளுபடிகள் -வரிச் சலுகைகள் வழங்குவது;
- எல்.ஐ.சி முதல் ஏர்இண்டியா வரையிலான பொதுத்துறை நிறுவனங்களை தனியார் முதலாளிகளுக்கு விற்பதில் ஆர்வம் காட்டுவது;
- கேஸ் சிலிண்டர் தொடங்கி மூக்குப்பொடி வரை ஜி.எஸ்.டி. போடுவது;
- மணிப்பூர் மாநிலமே பற்றி எரிகிறபோது உலகம் சுற்றி அறிவுரை கூறுவது;
- “அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சங்களை போற்றிப் பாதுகாப்பதற்குப் பதில்”, அதைத் தகர்த்தெறியும் பணியை அன்றாட நடவடிக்கையாக மேற்கொண்டு வருவது;


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்




கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (14.07.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழக மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் – பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் இ.பெரியசாமி, க.பொன்முடி, ஆ.ராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.